

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நடைபெற்ற பாகமுகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார்.மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள். சுப.மதியரசன், மாரியப்பன் கென்னடி ஒன்றியச் செயலாளர் துரை.ராஜாமணி, மானாமதுரை நகர செயலாளர் க.பொன்னுச்சாமி ஆகியோர் உள்ளார்கள்.

### மகாத்மா காந்தி குறித்து

# ஆர்.எஸ்.எஸ்.பேர்வழி சம்பாஜி பிடேவின் இழிவான கருத்துக்கு கடும் கண்டனங்கள்!

## உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் கோரிக்கை!

அமராவதி, ஆக 1- மகாத்மா காந்தியின் உண்மையான தந்தை ஒரு முஸ்லீம் நிலச்சுவான்தார் என்று மகாராஷ்டிரா மாநிலம் சங்க்லி பகுதியைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ். பேர்வழியான சம்பாஜி பிடே, வாய்க்கொழுப்பாக பேசியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஷிவபிரதிஸ்தான் ஹிந்துஸ்தான் சன்ஸ்தா அமைப்பின் நிறுவனரான சம்பாஜி பிடே, ஆந்திர மாநிலம் அமராவதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியுள்ளார்.

அந்த நிகழ்ச்சியில்தான், “மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியையே நாம் மகாத்மா காந்தி என்று அழைத்து வருகின்றோம்; ஆனால் கரம் சந்த் காந்தி, மோகன் தாஸின் தந்தை அல்ல. ஒரு முஸ்லிம் ஜமீன்தார்தான் அவரது உண்மையான தந்தை” என்று அவர் குறிப்பிட்டு உள்ளார்.

“இந்தியா ஒரு இந்து நாடு. இந்துக்களின் வீரம் மகத்தானது. ஆனால், இந்துக்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த மதம், கடமை மற்றும் பொறுப்புகளை மறந்து விடுவதால் அவர்கள் சீரழிந்து விட்டார்கள்” என்றும் போலிக் கண்ணீர் வடித்துள்ளார். பிடேவின் இந்தக் கருத்துக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

பிடேவுக்கு பதிலளித்துள்ள காங்கிரஸ் தலைவரும், மகாராஷ்டிரா மாநிலம் சங்கம்னேர் தொகுதி எம்.எல்.ஏ.வுமான பாலாசாகேப் தோராட், “மகாத்மா காந்தி குறித்து பிடே மிகவும் இழிவான கருத்தை தெரிவித்து உள்ளார். இது நாட்டு மக்களுக்கு மிகவும் கவலை அளிக்கிறது. பிடே தொடர்ந்து இதுபோன்ற கேவலமான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். அவருக்கு யார் சரியாக ஆதரவு அளிக்கிறார்கள் என்பதை கண்டு பிடிக்க வேண்டும். பிடேயின் நோக்கம் என்ன என்று தெரிய வேண்டும். யாருடைய அரசியல் நலனுக்காக அவர் மீண்டும் மீண்டும் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுகிறார்? பிடே மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி சார்பில் கோரிக்கை வைக்கிறேன். இந்த விவகாரத்தில், அரசு விரைந்து செயல்பட்டு பிடே மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முழுநேர ஊழியராக இருந்தவரான சாம்பாஜி உளறல்களுக்குப் பெயர் போனவர். தனது தோட்டத்தில் விளையும் மாம்பழங்களைச் சாப்பிடும் பெண்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் என்று கடந்த 2018ஆம் ஆண்டு, சாம்பாஜி கிளப்பிய சர்ச்சை நீதிமன்ற வழக்குவரை சென்றது. 2018ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று பீமா கோரே கானில் தலித்துக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சாதிய வன்முறையிலும் சம்பாஜி பிடே ஒரு குற்றவாளி என்பது குறிப்பிடத்தக்கது.

### திண்டுக்கல் மாவட்டம் – ஆத்தூரில்

# கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட விண்ணப்பங்கள் பதிவு!

## முகாம்கள்: அமைச்சர் இ.பெரியசாமி நேரில் ஆய்வு!



திண்டுக்கல், ஆக. 1 - ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்.இ.பெரியசாமி ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னாளப்பட்டி தேவாங்கர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கும்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மற்றும் குட்டியபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெறும் கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை திட்ட விண்ணப்பப் பதிவேற்றம் செய்யும் முகாமினை ஆய்வு செய்தார். ஆய்வின்போது ஆட்சித்தலைவர் மொ.நா. பூங்கொடி உடன்இருந்தார்.

ஆய்வுக்குப் பின் அமைச்சர் இ.பெரியசாமி கூறியதாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கான சமூக நீதி, சம உரிமையினை நிலைநாட்டிடவும், அவர்களின் பொருளாதார தேவைகளுக்காக பிறரை எதிர்பார்த்து இருக்காமல், அவர்களுக்கான ஒரு வருவாயை ஏற்படுத்தி பொருளாதார நிலையினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் அன்றாட செலவினங்களை எளிதில் மேற்கொள்ளவும், குடும்பத் தலைவிகளுக்கான மாதாந்திர உதவி வழங்கப்படும் என்று தேர்தல் காலத்தில் அறிவித்துள்ளபடி, கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதனடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில் 1,157 நியாயவிலைக் கடைகளில் 6,87,171 குடும்ப அட்டைகள் உள்ளன. இவர்கள் அனைவருக்கும் விண்ணப்பங்கள் முறையாக விநியோகம் செய்யப்பட்டு, கடந்த 24ந் தேதி முதல் முதற்கட்ட விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. பொதுமக்களின் கூட்ட நெரிசல் மற்றும் பொதுமக்களின் வேலை நேரங்களை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு வீட்டு குடும்ப அட்டைக்கும் நேரம் மற்றும் தேதி குறித்து குறிப்பிடப்பட்டு விண்ணப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தினசரி காலை 50 விண்ணப்பங்கள், மாலையில் 50 விண்ணப்பங்கள் என 100விண்ணப்பங்களை பதிவேற்றும் வகையில் முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த முகாம்கள் அடுத்த ஆகஸ்ட் மாதம் 4ந் தேதி வரை நடைபெறும். எனவே, பொதுமக்களின் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு அனைவரும் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யும் வகையில் விரிவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களால் செப்டம்பர் 15ந் தேதி துவங்கி வைக்கப்பட்டு, குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000/- அவர்கள் வங்கி கணக்கில் செலுத்தப்படும். தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் விடுபடாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறார்கள், எனவே, தமிழக அரசின் திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்திட வேண்டும் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முருகேசன், சின்னாளப்பட்டி பேரூர் தி.மு.க. செயலாளர் மோகன்ராஜ், சின்னாளப்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர் பிரதீபா கனகராஜ் மற்றும் சின்னாளப்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி துணைத் தலைவர் ஆனந்தி பாரதி ராஜா, ஆத்தூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜ கணேஷ், ஆத்தூர் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்த், சின்னாளப்பட்டி தி.மு.க.. பேரூர் அவைத் தலைவர் பாலகிருஷ்ணன், சின்னாளப்பட்டி பேரூர் வார்டு செயலாளர்கள் ஆறுமுகம், மணி, தங்கவேல், முருகன், தி.மு.க. ஒன்றிய பிரதிநிதி தங்கப்பாண்டி, ராஜா, தம்பிதுரை. சின்னாளப்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி கவுன்சிலர்கள் ரவிக்குமார், தாமரைச்செல்வி வேல்விழி சுகுமார், சாந்தி கணேசன், ஹேமா. செல்வகுமாரி. சின்னாளப்பட்டி பேரூர் இளைஞரணி நிர்வாகி கள் ரவிக்குமார் மணிமாறன், கோபிநாத். சின்னாளப்பட்டி பேரூர் தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகள் கார்த்திகேயன், வினோத் மற்றும் கழக மூத்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் 5 ஆம் ஆண்டு நினைவைப் போற்றும் வகையில்

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ முகாம்!

## தலைமை: டி.பி.எம்.மைதீன்கான்! முன்னிலை: சு.சுப்பிரமணியன்!

நெல்லை, ஆக. 1 - நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ம் ஆண்டு நினைவை போற்றும் வகையில் வருகிற ஆகஸ்ட் 6ஆம் தேதி மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ முகாம் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீ ன்கான் தலைமையில் நடைபெற உள்ளது என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் சக்தி மருத்துவமனையுடன் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் பாளையங்கோட்டை வ.உ.சி. உள் விளையாட்டு அரங்கில் வருகிற 06.08. 2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இந்நிகழ்வு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த சிறப்பு மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான உடல் பரிசோதனை, ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், எலும்பு நோய், பரிசோதனை தோள்பட்டை வலி, முதுகு வலி மற்றும் சேதம் அடைந்த மாற்றுத்திறனாளி ஆர்தோடிக்ஸ் கருவிகள் சரி செய்து தரப்படும்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)அண்டன் செல்லத்துரை(பாளை)

சாகுல் ஹமீது (மேலப்பாளையம்) நமச்சிவாயம் என்ற கோபி(நெல்லை) மற்றும் மாநகர துணைச் செயலாளர் அப்துல்கையூம் ஆகியோரிடம் வழங்கப் பட்டுள்ளது.

அந்த பகுதிக்கு உட்பட்ட வட்ட செயலாளர்கள், பகுதி செயலாளரிடம் மருத்துவ முகாமில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அந்தந்த வட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் விவரத்தை விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து அந்தந்த பகுதி செயலாளர்களிடம் வருகிற 03.08.2023 ம் தேதிக்குள் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத்திறனாளிகள் அனைவரும் வாய்ப்பினை பயன்படுத்தி சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுகிறேன்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பாளை பகுதி செயலாளர் அண்டன் செல்லதுரை செய்துள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அரசுப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு

# மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வலியுறுத்தல்!



நாமக்கல், ஆக. 1 - டெல்லியில் கோடைக் கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, ஒன்றிய அரசு கல்வி அமைச்சகம் மாநில அரசுகள் நடத்தும் அரசு பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

நாட்டில் அரசு நடத்தும் பல அரசுப் பள்ளிகளில் தற்போதுள்ள வகுப்பறைகள் பாழடைந்த நிலையில் உள்ளன. மேலும் புதிய வகுப்பறைகள் கட்ட மாநில வாரியாக நிதி ஒதுக்கி, புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

இதற்கு கல்வி அமைச்சக ஒன்றிய இணை அமைச்சர் அன்னபூர்ணா தேவி பதிலளிக்கையில்,

பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, கல்வி அமைச்சகம் 2018 19 முதல் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், தற்போதுள்ள அரசுப் பள்ளிகளை வலுப்படுத்துவதற்கும், வகுப்பறைகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் 2018 -19 முதல் சமக்ரா சிக்ஷாவை செயல்படுத்துகிறது. கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பிலிருந்து (UDISE+) நிர்ணயிக்கப்பட்ட இடைவெளிகள் மற்றும் அந்தந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு பள்ளிகளின் தேவை மற்றும் வகுப்பறைகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள், ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த மாநிலம் / யூனியன் பிரதேசங்களால் அவற்றின் தேவை மற்றும் முன்னுரிமையைப் பொறுத்து அவர்களின் வருடாந்திர வேலைத் திட்டம் மற்றும் பட்ஜெட்டில் (AWP&B) அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் திட்டங்கள் பின்னர் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் கலந்தாலோசித்து பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் திட்ட ஒப்புதல் வாரியத்தால் (PAB) மதிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.

அரசியலமைப்பு மற்றும் பெரும்பாலான பள்ளிகளின் ஒருங்கிணைந்த பட்டியலில் கல்வி ஒரு பாடமாக உள்ளது. சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தின் கீழ் (RTE), பள்ளிகளில் உள்கட்டமைப்பை வழங்குவதற்கான ஆணை உள்ளது. RTE சட்டம், 2009 அட்டவணையில் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைக ளுக்கு இணங்க மற்றும் மாநில RTE விதிகள். RTE சட்டம், 2009 க்கான அட்டவணை, விதிமுறைகள் மற்றும் தரநிலைகளை வகுத்துள்ளது.

பள்ளி கட்டிடம். 2023 24 ஆம் ஆண்டில் மாநிலங்கள்/யூனியன் பிரதேச ங்களுக்கு தொடக்க மற்றும் மேல்நிலை மற்றும் மூத்த மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்காக அனுமதிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் பதிலளித்துள்ளார்.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

## (ஜூன் - 2023 - ஜூன் 2024)

## ஆகஸ்ட் மாத நிகழ்வுகள் 2023



| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 04/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்குபுகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 38,38A காட்டூர் பகுதி | சி.தமிழ்மணி அ.மன்சூர் அலி | ஒப்பிலாமணி தலைமைக் கழக பேச்சாளர் |
| 06/08/2023 9.00 காலை | மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் ஆங்கில கருத்தரங்கம் | மாவட்ட மருத்துவர் அணி | டாக்டர் என்.சுரேஷ் பாபு மாவட்ட அமைப்பாளர் தொகுதி அமைப்பாளர்கள் எம்.சந்தோஷ் குமார் ரா.முஹமது மன்சூர் A.பால்வண்ணன் | டாக்டர் எழிலன் நாகநாதன் M.L.A மாநில செயலாளர் |
| 11/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 44,44A பொன்மலை பகுதி | எம்.சுப்ரமணி எஸ்.சேசுராஜ் (எ) துரை | பவானி கண்ணன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 13/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் பொதுக்கூட்டம் | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி ஒன்றிய செயலாளர் | ஈரோடு முத்துசாமி, ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் |
| 20/08/2023 10.00 காலை | மருங்காபுரி தெற்கு ஒன்றியத்தில் 15 ஊராட்சிகளிலும், தலைவர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு அமைத்து கொடியேற்றுதல் | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | சி.சின்ன அடைக்கண் ஒன்றிய செயலாளர் | தெற்கு மாவட்டக் கழக செயலாளர் |
| 20/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் பொதுக் கூட்டம் | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | மா.சுப்ரமணியன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் |
| 21/08/2023 9.00 காலை | தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டி | மாவட்ட, மாநகர இலக்கிய அணி | புலவர் ந.ப.மனோகரன் மாவட்ட அமைப்பாளர் ஜெ.சரவணன் மாநகர அமைப்பாளர் | வி.பி.கலைராஜன் EX.M.L.A. மாநில செயலாளர் |
| 22/08/2023 8.00 காலை | திருவெறும்பூர் தொகுதியில் மாவட்ட கழக சார்பில் 100 அடி உயர கம்பத்தில் கொடியேற்றுதல் மற்றும் தலைவர் கலைஞர் குறித்த ஆய்வரங்கம் | மாவட்டக் கழகம் | தெற்கு மாவட்டக் கழக செயலாளர் | டி.ஆர்.பாலு எம்.பி. கழக பொருளாளர் ஆய்வரங்கத்தில் பங்கேற்போர் ஆளூர் ஷானவாஸ் முனைவர் சுபவீரபாண்டியன் |
| 23/08/2023 5.30 மாலை | தலைவர் கலைஞர் நினைவு மாட்டுவண்டி எல்லை பந்தயம் | மாவட்ட பொருளாளர் | என்.குணசேகரன் | தெற்கு மாவட்டக் கழக செயலாளர் |
| 28/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 19,19A மார்க்கெட் பகுதி | க.வேலுமணி எஸ்.கே.சாதிக்பாட்சா | கரூர் முரளி தலைமைக் கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முட்டுக்காடு படகு இல்லத்தில் தனியார் நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதியின் கீழ் ரூ.46.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் சுகாதார வளாகம், கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு, பிளாஸ்டிக் பாட்டில்களை தூளாக்கும் இயந்திரம், காற்றில் இருந்து குடிதண்ணீர் தயாரிக்கும் இயந்திரம், சிறுவர் பூங்கா ஆகியவற்றை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 29.07.2023 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி கலந்து கொண்டார்.